வாக்காளர் பட்டியலில் பலரது பெயர்கள் விடுபட்டதாக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை, முன்னாள் கவர்னர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் கூறியிருப்பது பற்றி கேட்டால், ஒவ்வொரு பெயரும் விடுபட்டதை ஒவ்வொன்றாக ஆய்வு செய்ய வேண்டும். பொதுவான காரணம் கூற முடியாது. ஒவ்வொரு ஆண்டும் வாக்காளர் பட்டியலில் பெயரை சரிபார்க்க அநேக வாய்ப்புகள் தரப்படுகின்றன. இணையதள வசதிகள் உள்ளன.

பதிவு அதிகாரிகள், வாக்குச்சாவடி அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் என எத்தனையோ வசதிகள் உள்ளன. அதை பயன்படுத்திக் கொண்டு தேர்தலுக்கு முன்பே சரிபார்த்து, பெயர் பதிவை உறுதி செய்துகொள்ள வேண்டும். இப்படிச் செய்வதன்மூலம் கடைசி நேரத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லை என்று வருந்துவதை தவிர்க்க முடியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

---

**தேர்தல் சோதனை:**

**ரூ.1,308 கோடி பணம், பொருட்கள் பறிமுதல்**

20-ந்தேதி காலை 9 மணி வரை, தமிழகத்தில் பறக்கும் படைகள் மூலம் ரூ.84.76 கோடி, வருமான வரித்துறை மூலம் ரூ.95.07 கோடி என மொத்தம் ரூ.179.84 கோடி ரொக்கப்பணம்; ரூ.1,083.78 கோடி மதிப்புள்ள தங்கம், வெள்ளி; ரூ.7.91 கோடி மதிப்பிலான மதுபான வகைகள்; ரூ.35.80 கோடி மதிப்பிலான இலவச பரிசுப்பொருட்கள்; ரூ.1.17 கோடி மதிப்பிலான போதை பொருட்கள் என மொத்தம் ரூ.1,308.51 கோடி மதிப்பிலான பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த தகவலை தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு நேற்று தெரிவித்தார்.

---

News regarding confusion in the calculation of the polling percentage

தினத்தந்தி
23 APR 2024

மாநில எல்லைகளில் கண்காணிப்பு தொடரும்

## தமிழக உள்மாவட்டங்களில்

# பறக்கும் படை சோதனை நிறுத்தம்

### ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு செல்ல தடை இல்லை

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் முடிந்துள்ள நிலையில், தமிழக உள்மாவட்டங்களில் பறக்கும் படை சோதனை நிறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு செல்ல தடை இருக்காது.

சென்னை, ஏப்.23-

நாடாளுமன்ற தேர்தல் ஏப்ரல் 19-ந்தேதி தொடங்கி ஜூன் 1-ந்தேதி வரை 7 கட்டங்களாக நடைபெறும் என்று இந்திய தேர்தல் கமிஷன் கடந்த மார்ச் மாதம் 16-ந்தேதி அறிவித்தது.

தேர்தல் தேதி அறிவித்ததில் இருந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்தன.

#### பணம், பொருட்கள் பறிமுதல்

அதாவது ஆவணம் இல்லாமல் ரூ.50 ஆயிரத்துக்கு மேல் பணம் கொண்டு செல்லக் கூடாது என பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதனையடுத்து தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டு பல்வேறு இடங்களில் பணம், பொருட்களை பறிமுதல் செய்தனர்.

தமிழகத்தை பொறுத்தவரை கடந்த 19-ந்தேதியே தேர்தல் முடிந்தாலும், அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் தேர்தல் முடியாததால், தேர்தல் விதிமுறைகள் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளான ஜூன் 4-ந்தேதி வரை அமலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது.

இதனால் வணிகர்கள் சிரமப்பட்டு வருகிறார்கள். தமிழ்நாட்டில் தேர்தல் முடிந்துவிட்டதால் தேர்தல் வழிமுறைகளில் தளர்வு அளிக்க வேண்டும் என்று வணிகர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்து வந்தனர்.

#### மறு வாக்குப்பதிவு

இதற்கிடையே சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரி

(2-ம் பக்கம் பார்க்க)

Withdrawal of flying Squad Team & there is no restrictions to Carry more money

தினத்தந்தி
23 APR 2024

# பறக்கும் படை சோதனை...

(1–ம் பக்க தொடர்ச்சி)

சத்யபிரத சாகு நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:-

வாக்குச்சாவடிகளுக்கு மறு வாக்குப்பதிவு நடத்தக்கோரி இதுவரை எங்களிடம் எந்த கோரிக்கையும் வரவில்லை. மறு வாக்குப்பதிவு நடத்த வேண்டுமா என்பதை சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அதிகாரியும், தேர்தல் பொதுப்பார்வையாளரும் முடிவு செய்து பரிந்துரைக்க வேண்டும்.

அதன் அடிப்படையிலேயே தேர்தல் கமிஷன் உரிய அறிவிப்பை வெளியிடும். ஆனால் இதுவரை அதுபோன்று மறு வாக்குப்பதிவுக்கான பரிந்துரை எதுவும் தேர்தல் கமிஷனுக்கு சென்றதாக தகவல் இல்லை.

எம்.எல்.ஏ. மரணம் காரணமாக விக்கிரவாண்டி தொகுதி காலியாக உள்ளது. அந்தத்தொகுதியில் இடைத் தேர்தல் நடத்தப்படுமா? என்பதை தேர்தல் கமிஷன்தான் அறிவிக்க முடியும். இதுவரை அது பற்றிய தகவல் இல்லை.

## பறக்கும் படை கலைப்பு

தமிழகத்தில் 39 நாடாளுமன்ற தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நிறைவடைந்துள்ள நிலையில் தமிழகத்தில் உள்மாவட்டங்களில் அனுமதிக்கப்பட்டிருந்த பறக்கும் படை, நிலையான கண்காணிப்பு குழுக்கள் மற்றும் வீடியோ கண்காணிப்பு குழுக்கள் கலைக்கப்பட்டு விட்டன.

தேர்தல் நடைபெற உள்ள பக்கத்து மாநில எல்லையை ஒட்டியுள்ள திருவள்ளூர், வேலூர், கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, நீலகிரி, கோவை, நெல்லை, தேனி, கன்னியாகுமரி, தென்காசி, திருப்பத்தூர், திருப்பூர் ஆகிய 13 மாவட்டங்களில் மட்டும் பறக்கும்படை, நிலையான கண்காணிப்பு குழுக்களின் வாகன சோதனை இருக்கும்.

## 171 குழுக்கள்

அந்த 13 மாவட்டங்களிலும் மொத்தம் 69 பறக்கும்படைகளும், 102 நிலையான கண்காணிப்பு குழுக்களும் சேர்த்து மொத்தம் 171 குழுக்கள் சோதனை மேற்கொள்ளும். நிலையான கண்காணிப்பு குழுவினர், பக்கத்து மாநில எல்லை சோதனைச் சாவடிகளில் வாகன சோதனைகளை மேற்கொள்வார்கள். அந்த மாநிலங்களில் தேர்தல் முடிந்ததும், அவற்றின் எல்லையில் உள்ள பறக்கும்படைகள் திரும்பப் பெறப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது அவரிடம், எல்லை மாவட்டங்களைத் தவிர மற்ற 25 மாவட்டங்களில் உரிய ஆவணம் இல்லாமல் ரூ.50 ஆயிரத்துக்கு மேல் ரொக்கம் மற்றும் நகைகளை எடுத்து செல்ல முடியுமா? என்று கேட்டபோது, பறக்கும்படை சோதனை அங்கு இல்லாவிட்டாலும் அனைத்து மாவட்டங்களிலும் தேர்தல் நடத்தை விதிகள் அமலில்தான் உள்ளன என்று சத்யபிரத சாகு பதில் அளித்தார்.

News regarding flying squad

தினத்தந்தி

23 APR 2024



நாகாலாந்தில் உள்ள நாகா மொருங்க் ஆதிவாசிகள் வீடு போல் அமைக்கப்பட்டு இருந்த வாக்குச்சாவடி.



ஓட்டுப்போட்டு விட்டு மகிழ்ச்சியாக போட்டோவுக்கு போஸ் கொடுத்த சோம்பென் ஆதிவாசி வாலிபர்.

7 சகோதரி மாநிலங்களில் 72 சதவீத வாக்குப்பதிவு:

# தேர்தல் வரலாற்றில், முதல் முறையாக ஓட்டுப் போட்ட அந்தமான் ஆதிவாசிகள்

சென்னை, ஏப்.23-
7 சகோதரி மாநிலங்களில் 72 சதவீத வாக்குப்பதிவு நடந்துள்ளது. மேலும் தேர்தல் வரலாற்றிலேயே அந்தமானில் உள்ள ஆதிவாசிகள் முதல் முறையாக ஓட்டுப்போட்டனர்.

## தேர்தல் ஆணையம்

நாடு முழுவதும் முதல் கட்ட வாக்குப்பதிவு, 21 மாநிலங்களில் உள்ள 102 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு கடந்த 19-ந் தேதி தேர்தல் நடந்து முடிந்து இருக்கிறது. அதில் தமிழ்நாடு, அந்தமான் நிக்கோபர் தீவுகள், அருணாச்சல பிரதேசம், லட்சத்தீவு, மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, புதுச்சேரி, சிக்கிம், உத்தரகாண்ட் ஆகிய பகுதிகளில் உள்ள அனைத்து நாடாளுமன்ற தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக நடந்து முடிந்துவிட்டது. மற்ற பகுதிகளில் பகுதியாக நடந்து இருக்கிறது.

அமைதியாக நடந்து முடிந்துள்ள முதல் கட்ட தேர்தலில் 69.34 சதவீத வாக்குகள் பதிவாகி இருப்பதாக தேர்தல் ஆணையம் அறிவித்து உள்ளது. மணிப்பூரில் கலவரம் அரங்கேறிய 11 வாக்குச்சாவடி மையங்களுக்கு நேற்று மறுதேர்தல் நடத்தப்பட்டு உள்ளது. மணிப்பூரை பொறுத்தவரை உள்புறம் மணிப்பூர், வெளிப்புறம் மணிப்பூர் என 2 நாடாளுமன்ற தொகுதிகள் உள்ளன. அதில் உள்புற மணிப்பூர் முழுவதும் மற்றும் வெளிப்புற மணிப்பூரில் பாதி இடங்களுக்கும் கடந்த 19-ந் தேதி தேர்தல் முடிந்துவிட்டது. 2-ம் கட்டமாக வெளிப்புற மணிப்பூரில் மீதமுள்ள இடங்களுக்கு 26-ந் தேதி தேர்தல் நடக்கிறது.

## வாய்பேச முடியாதவர்கள்

இதுதவிர 370-வது சட்டப்பிரிவு நீக்கப்பட்ட பின்பு ஜம்மு காஷ்மீரில் நடக்கும் முதல் நாடாளுமன்ற தேர்தல் என்பதால் உலகம் முழுவதும் கவனம் பெற்றது. அங்குள்ள 5 தொகுதிகளில் உத்தம்பூர் தொகுதியில் மட்டும் நடந்த முதல் கட்ட தேர்தலில் 68 சதவீத வாக்குகள் பதிவாகி இருக்கிறது. அங்குள்ள தாத்காகி என்ற கிராமத்தில் உள்ள 35 சதவீத மக்கள் காதுகேளாதோர் மற்றும் வாய்பேச முடியாதவர்களாக உள்ளனர். அவர்கள் எளிதாக வாக்களிக்கும் வகையில் தேர்தல் ஆணையம் அங்கு கூடுதல் ஊழியர்களை நியமித்து சிறப்பு நடவடிக்கைகளை எடுத்தது. அதனால் அங்கு வாக்கு சதவீதம் அதிகரித்து இருந்தது.

அதேபோல் முதல் கட்ட தேர்தலில் ஆதிவாசி மக்களின் வாக்குப்பதிவை அதிகரிக்க தேர்தல் ஆணையம் எடுத்த சில சிறப்பு நடவடிக்கைகள் நல்ல பலனை தந்து இருக்கிறது. அந்தமான் தீவில் உள்ள சோம்பென் ஆதிவாசி மக்கள் வரலாற்றிலேயே முதல் முறையாக இந்த தேர்தலில் வாக்களித்து இருக்கின்றனர். மக்களுடன் எந்த தொடர்பும் இல்லாமல் வசித்து வரும் அவர்களை தேர்தல் அதிகாரிகள் ஒருங்கிணைத்து 84 பேருக்கு வாக்காளர் அடையாள அட்டைகளை வழங்கி நாடாளுமன்ற தேர்தல் குறித்து எடுத்துரைத்தனர். அதில் 6 பேர் வந்து ஓட்டுப்போட்டு, புகைப்படமும் எடுத்து சென்றனர். மேலும் அங்கு முதல் முறையாக ஒங் ஆதிவாசிகள் 68 பேரில் 63 பேரும், கிரேட் அந்தமான் பழங்குடியினர் 39 பேரில் 33 பேரும் வாக்களித்து இருக்கிறார்கள்.

## 7 சகோதரி மாநிலங்கள்

இதுதவிர நாடு முழுவதும் ஆதிவாசிகள் வசிக்கும் பகுதிகளில் அவர்களின் வீடுகள் போன்றே வாக்குச்சாவடி மையங்களையும் தேர்தல் ஆணையம் அமைத்து இருந்தது. குறிப்பாக நாகாலாந்தில் நாகா மொருங்க், மராட்டியத்தில் உள்ள மாடியா இன மக்களின் வீடுகளை போன்று அமைக்கப்பட்டு இருந்த வாக்குச்சாவடிகள் அனைவரையும் கவர்ந்து இழுத்தது. மேலும் இந்த தேர்தலில் பெண்கள் மட்டுமே பணியாற்றிய பிங்க் வாக்குச்சாவடிகள், சிகப்பு கம்பளத்துடன் அலங்கரிக்கப்பட்டு இருந்த மாதிரி வாக்குச்சாவடிகள் நல்ல முயற்சியாகும்.

முன்பு எப்போதும் இல்லாத வகையில் 7 சகோதரி மாநிலங்கள் என்று அழைக்கப்படும் வடகிழக்கு மாநிலங்களில் 72 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன. அருணாசல பிரதேசத்தில் 78.19 சதவீதம், அசாமில் 78.25, திரிபுரா 81.48, மணிப்பூரில் 75.17 சதவீதம், மேகாலயாவில் 76.60, நாகாலாந்தில் 57.72, மிசோரமில் 56.87 ஆகிய சதவீதத்தில் வாக்குகள் பதிவானது. மற்றொரு வடகிழக்கு மாநிலமான சிக்கிமில் 79.91 சதவீத வாக்குகள் பதிவாகி சாதனை படைக்கப்பட்டது.

## 2-ம் கட்ட தேர்தல்

மேலும் நக்சலைட்டுகளால் அதிகம் பாதிக்கப்பட்டு உள்ள சத்தீஷ்கார் மாநிலத்தின் பஸ்தார் மாவட்டத்தில் மக்கள் அச்சமின்றி வாக்களிக்க வசதியாக முதல் முறையாக அங்குள்ள 56 கிராமங்களிலேயே வாக்குச்சாவடி மையம் அமைக்கப்பட்டு இருந்தது. அதனால் அந்த தொகுதியில் வாக்குசதவீதம் 68 சதவீதமாக அதிகரித்துள்ளது. 7 கட்டங்களாக நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலில் முதல் கட்டத்தில் ஓரிரு சம்பவங்களை தவிர தேர்தல் மிக அமைதியாக நடந்து முடிந்து இருக்கிறது.

2-ம் கட்ட தேர்தல் 13 மாநிலங்களில் உள்ள 89 தொகுதிகளுக்கு வருகிற 26-ந் தேதி நடைபெற இருக்கிறது.

for the first time in history of elections the Andaman tribes voted

தினமலர்
23 APR 2024

# வாக்காளர் பெயருடன் ஆதார் எண் இணைப்பதே குழப்பம் தவிர்க்க வழி

## தலைமை தேர்தல் அதிகாரி விளக்கம்

சென்னை, ஏப். 23–

ஓட்டுப்பதிவு சதவீதத்தை அறிவிப்பதில் ஏற்பட்ட குழப்பத்திற்கும், வாக்காளர்களின் பெயர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதாக வந்த புகார்களுக்கும், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூ விளக்கம் அளித்துள்ளார்.

அவர் கூறியதாவது:

ஓட்டுப்பதிவு அன்று, மொபைல் போன் செயலி வழியாக ஓட்டுப்பதிவு சதவீதம் விபரங்களை கேட்டோம். அதில் ஒரு சிலர் முழு விபரத்தை பதிவிடவில்லை. செயலியில் வந்த தகவல் அடிப்படையில், ஓட்டுப்பதிவு சதவீதம் முதலில் தெரிவிக்கப்பட்டது.



சத்யபிரதா சாஹூ




### பொறுப்பு யார்?

அதன்பின், ஓட்டுச் சாவடி அலுவலர்கள் கையெழுத்திட்டு கொடுத்த படிவத்தில் இருந்த ஓட்டுப்பதிவு விபரங்களை, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் சேகரித்து, தேர்தல் கமிஷன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்தார்.

இப்பணியை இரவு 11:59 மணிக்குள் முடிக்க உத்தரவிடப்பட்டிருந்தது.

அதன்படி, தூத்துக்குடி தவிர அனைத்து மாவட்ட உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களும் பதிவேற்றம் செய்து விட்டனர்.

மறுநாள் ஓட்டுப்பதிவு விபரங்களை, தேர்தல் பார்வையாளர்கள், அரசியல் கட்சியினர் முன்னிலையில் ஆய்வு செய்தனர். அதன்பின், இறுதி ஓட்டுப்பதிவு விபரம் வெளியிடப்பட்டது.

இந்த மொபைல் போன் செயலியை, 2019 லோக்சபா தேர்தலிலும் பயன்படுத்தினோம்.

இதில் கட்டாயம் ஓட்டுப்பதிவு விபரத்தை பதிவிட வேண்டும் என, ஓட்டுச்சாவடி தலைமை அலுவலரை கட்டாயப்படுத்த முடியாது.

ஏனெனில் ஓட்டுச் சாவடியில் வேறு பணி இருந்தால், அவர்கள் பதிவேற்றம் செய்ய முடியாது. தேர்தலை பொறுத்தவரை, ஓட்டுப்பதிவுக்கு ஓட்டுச்சாவடி தலைமை அலுவலர், தேர்தல் நடத்தும் அலுவலர் ஆகியோர் தான் பொறுப்பு.

அவர்கள் முழுமையாக பணி முடித்து, ஆய்வு செய்த பின் தான், முழு விபரத்தை வெளியிடுவர்.

கடந்த 2021 சட்டசபை தேர்தலில், 69 சதவீதம் ஓட்டுப்பதிவு என தெரிவித்தோம். இறுதியில், 72 சதவீதம் ஓட்டுப்பதிவு என தெரிவிக்கப்பட்டது.

இம்முறை முதலில் சொன்னதை விட குறைந்துள்ளது.

### பெயர் நீக்கம்

வாக்காளர்கள் பெயர் பல இடங்களில் நீக்கப்பட்டுள்ளதாக புகார்கள் வந்துள்ளன. ஒவ்வொரு நீக்கத்துக்கும் ஒவ்வொரு காரணம் இருக்கும்.

வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி நடந்து, கடந்த அக்டோபரில் வரைவு பட்டியல் வெளியிடப்பட்டது.

கட்சிகளுக்கு பட்டியல் பிரதி வழங்கப்பட்டது. புதிதாக சேர்க்கப்பட்டவர்கள், நீக்கப்பட்டவர்கள் விபரம் அதில் இருந்தன.

மாவட்ட, மாநில அளவில் கட்சிகள் கூட்டம் நடத்தியும் விபரம் தெரிவிக்கப்பட்டது. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட போதும் கூட்டம் நடத்தி கட்சிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

பெயர் விடுபட்டவர்கள், மார்ச் 23 வரை விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிக்கப்பட்டது.

வாக்காளர் பட்டியலுக்கு மாவட்ட தேர்தல் அலுவலரே பொறுப்பு.

பெயர் விடுபட்டால், மாவட்ட தேர்தல் அலுவலரான கலெக்டர், ஓட்டுச் சாவடி அலுவலர், வாக்காளர், கட்சியினர் என எல்லாருக்குமே பொறுப்பு உள்ளது.

ஓட்டுச் சாவடி அலுவலர் ஆய்வுக்கு செல்லும்போது, வாக்காளர் அங்கு குடியிருக்காவிட்டால், பெயர் நீக்கப்பட வாய்ப்புள்ளது. இடம் மாறி செல்வதாக வாக்காளர் விண்ணப்பம் அளித்திருந்தால் அல்லது இறந்திருந்தால் பெயர் நீக்கப்படும்.

### வழக்கு

எனவே, ஏராளமான பெயர் நீக்கப்பட்டிருப்பதாக முன்பே தெரிவித்திருந்தால் உடனே நடவடிக்கை எடுத்திருக்க முடியும். தற்போது புகார் வந்தால் விசாரிக்கப்படும்.

வாக்காளர் பட்டியலில், வாக்காளரின் ஆதார் எண்ணை இணைத்தால், இது போன்ற குளறுபடிகளை தவிர்க்கலாம். ஆனால், நீதிமன்ற வழக்கு காரணமாக, தேர்தல் கமிஷன் அனுமதி வழங்காமல் உள்ளது.

இவ்வாறு சாஹூ கூறினார்.

CEO informs that linking Aadhar with voter id is the way to avoid confusions in low turnout

தினமலர்
23 APR 2024

# வாக்காளர் அட்டை வைத்திருந்தும் 3,000 பேரின் ஓட்டுகள் 'வேஸ்ட்'

**சென்னை, ஏப். 23–**

பெரும்பாக்கம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பில், 21,000 வீடுகள் உள்ளன. மொத்தம், 160 பிளாக்குகளில், 60,000த்துக்கும் மேற்பட்டோர் வசிக்கின்றனர்.

இவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சமுதாய வளர்ச்சி பிரிவு ஏற்படுத்தி தருகிறது.

இந்த குடியிருப்பு வளாகத்தில் குறைந்தது, 50,000த்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளனர். ஆனால், 18,250 வாக்காளர்களுக்கு மட்டுமே ஓட்டு உள்ளது.

**பெயர் நீக்கம்**

இங்கு வசிப்போர், மறுக்குடியமர்வு செய்யப்பட்டபோது, ஏற்கனவே அவர்கள் வசித்த பகுதியில் வாக்காளர் பட்டியலில் இருந்த பெயர்கள் நீக்கப்பட்டன.

இதுகுறித்து, நம் நாளிதழில் விரிவாக செய்தி வெளியானது. இதையடுத்து, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு, செங்கல்பட்டு மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் விளக்கம் கேட்டு உள்ளார்.

தேர்தல் முடிந்ததும், விடுபட்டோர் அனைவருக்கும் வாக்காளர் அடையாள அட்டை வழங்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என, வாரிய அதிகாரிகள் கூறினர்.

இது ஒருபுறமிருக்க, ஏப்., 19 ஓட்டுப்பதிவு நாளில், இப்பகுதிக்கான 18 ஓட்டுச்சாவடிகளில் ஓட்டுப்பதிவு நடந்தது. இவற்றில் 18,250 பேர் ஓட்டளித்திருக்க வேண்டும். ஆனால், 8,023 பேர் மட்டுமே ஓட்டளித்து உள்ளனர்.

பல வாக்காளர்களின் அடையாள அட்டையில், வீட்டு எண், பிளாக் எண் சரியாக பதிவு செய்யாததால், எந்த ஓட்டுச்சாவடிக்கு செல்வது என தெரியாமல், ஓட்டளிக்காமல் ஏமாற்றம் அடைந்து உள்ளனர்.

சிலருக்கு, சித்தாலப்பாக்கம், ஒட்டியம்பாக்கம், சோழிங்கநல்லூரில் ஓட்டுச்சாவடி இருந்தது. இதன் காரணமாகவும், பலர் ஓட்டளிக்கவில்லை.

இந்த வகையில், வாக்காளர் அடையாள அட்டை இருந்தும், 3,000த்துக்கும் மேற்பட்டோர் ஓட்டளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து, நலச்சங்கத்தினர் கூறியதாவது:

ஏற்கனவே வசித்த பகுதியில், எந்த பிரச்னை இல்லாமல், பல தேர்தல்களில் ஓட்டளித்தோம். இங்கு வந்த பின் தான், அட்டையில் தவறான தகவல் பதிந்து கொடுத்தனர்.

பிளாக் எண் இருந்தால், வீட்டு எண்ணை இல்லை; வீட்டு எண் இருந்தால், பிளாக் எண் இல்லை. ஓட்டுப்பதிவு நாளில், 8, 10 ஓட்டுச்சாவடிகள் சென்று, அட்டையை காட்டி ஓட்டளிக்க அனுமதிக்கும்படி கேட்டோம்.

**நடவடிக்கை**

ஆனால், தேர்தல் அலுவலர்கள், ஓட்டு இல்லை என திருப்பி அனுப்பினர். முறையாக வழிகாட்டவும், அதிகாரிகள் இல்லை.

எங்கள் ஓட்டு உரிமையை நிறைவேற்ற முடியாத வருத்தம் ஏற்பட்டது. எங்கள் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த தனித்துறை அமைத்தும், எந்த பயனும் இல்லை.

அடுத்த தேர்தலில், அனைவரும் ஓட்டளிக்கும் வகையில், தேர்தல் கமிஷன் மற்றும் வாரியம் இணைந்து, தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

News regarding Apartment in perumpakkam have 60,000 residence but there only 18,250 in the voter list.

தினமலர்
23 APR 2024

# ஓட்டுப்பதிவு குறைவு: ஆய்வு செய்ய நிதி

சென்னை, ஏப். 23–

'ஓட்டுப்பதிவு குறைந்த தொகுதிகளில், ஓட்டுப்பதிவு ஏன் குறைந்தது என்பதற்கான காரணம் குறித்து ஆய்வு செய்ய, மாவட்ட தேர்தல் அலுவலர் விரும்பினால், அதற்கான நிதியை, தேர்தல் கமிஷன் வழங்கும்' என, தமிழகத் தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு தெரிவித்தார்.

லோக்சபா தேர்தலில், ஓட்டுப்பதிவை அதிகரிக்க, தேர்தல் கமிஷன் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. ஆனால், எதிர்பார்த்த



பலன் கிடைக்கவில்லை. கடந்த 2019 லோக்சபா தேர்தலை விட, இரண்டு சதவீதம் ஓட்டுகள் குறைந்துள்ளன.

இது குறித்து, தமிழகத் தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு கூறியதாவது:

ஓட்டுப்பதிவு சதவீதம் குறைவு குறித்து ஆய்வு செய்ய வேண்டும். மக்களிடம் ஏன் ஓட்டளிக்கவில்லை என்று கேட்க வேண்டும்.

மாவட்ட தேர்தல் அலுவலர், தொகுதியில் ஏன் ஓட்டுப்பதிவு குறைந்தது என ஆய்வு செய்யலாம். குறிப்பிட்ட ஓட்டுச்சாவடியில் ஏன் ஓட்டுப்பதிவு குறைந்தது என, ஆய்வு செய்யலாம். இதற்கு தேர்தல் கமிஷனிடம் அனுமதி பெற்றால், அதற்கு தேவையான நிதி வழங்கப்படும்.

இவ்வாறு, அவர் கூறினார்.

CEO informs that the Commission will provide fund if the DEO wants to study the reason why the voter turnout is low.

தினமலர்

23 APR 2024

# லோக்சபா தேர்தல்: பறிமுதல் தொகை ரூ.1,308.51 கோடி

**சென்னை, ஏப். 23–**

தமிழகத்தில் லோக்சபா தேர்தலையொட்டி நடத்தப்பட்ட சோதனையில், 1,308.51 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன.

கடந்த மார்ச் 16 தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து, அனைத்து தொகுதிகளிலும், பறக்கும் படை, நிலை கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு, வாகன சோதனைகள் நடத்தப்பட்டன. வருமான வரித்துறையினரும் சோதனை நடத்தினர்.

இச்சோதனையில் கடந்த 20ம் தேதி வரை, 179.84 கோடி ரூபாய் ரொக்கம்; 7.91 கோடி ரூபாய் மதுபானங்கள்; 1.17 கோடி ரூபாய் போதைப் பொருட்கள்; 1,083.79 கோடி ரூபாய் மதிப்பு தங்கம், வெள்ளி, வைர நகைகள்; 35.80 கோடி ரூபாய் இதர பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றின் மொத்த மதிப்பு 1,308.51 கோடி ரூபாய். இம்முறை தனியார் நிறுவனத்திற்கு எடுத்து செல்லப்பட்ட, 1,425 கிலோ தங்கம் பறிமுதல் காரணமாக, பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு அதிகமானது.

அந்த தங்கம், உரிய ஆவணங்கள் காண்பிக்கப்பட்டதால், சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

1308.51 Crores were seized in overall Tamil Nadu.

தினமலர்
23 APR 2024

# ஓட்டுச்சாவடிகளை சுத்தம் செய்ய உத்தரவு

சென்னை, ஏப். 23–

ஓட்டுச்சாவடிகளை சுத்தம் செய்ய, உள்ளாட்சி அமைப்புகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 39 லோக்சபா தொகுதிகளுக்கும், விளவங்கோடு சட்டசபை தொகுதிக்கும் கடந்த 19ம் தேதி தேர்தல் நடந்தது. ஓட்டுப்பதிவுக்காக அரசு பள்ளிகளில், 68,321 ஓட்டுச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு வகுப்பறையிலும், ஒரு ஓட்டுச்சாவடி அமைக்கப்பட்டிருந்தது. வகுப்பறை வெளியே, வேட்பாளர்களின் பெயர், புகைப்படம், சின்னம் ஒட்டப்பட்டிருந்தது. ஓட்டுச்சாவடிக்காக பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.

ஓட்டுப்பதிவு அன்று, ஓட்டுச்சாவடி அலுவலர்கள், வேட்பாளர்களின் முகவர்கள், போலீசார் போன்றோர் அங்கேயே உணவருந்தினர்.

உணவு பார்சல் குப்பை, குடிநீர் பாட்டில் போன்றவற்றை வகுப்பறையில் குவித்து வைத்துள்ளனர். இது தொடர்பாக, பள்ளி மாணவி ஒருவர், 'எங்கள் பள்ளியை இப்படி நாசப்படுத்தி உள்ளீர்களே...' என கேள்வி எழுப்பும் வீடியோ, சமூக வலைதளங்களில் பரவியது.

இது குறித்து, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூ கூறுகையில், ''ஓட்டுச்சாவடிகள் அமைந்த பள்ளிகளில், குப்பை கழிவுகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க, உள்ளாட்சி அமைப்புகளுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது,'' என்றார்.

CEO instruct the local bodies to clean the polling booths

தினமணி
23 APR 2024

# 13 மாவட்டங்களில் தொடரும் பறக்கும் படை சோதனை

## தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு

சென்னை, ஏப். 22: மக்களவைத் தேர்தல் நடத்தை விதிமுறைகளின் ஒரு பகுதியாக 13 மாவட்டங்களில் மட்டும் 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணிகள் தொடரும் என்றும், இந்தச் சோதனைகளில் 171 குழுக்கள் ஈடுபட்டுள்ளதாகவும் தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார்.

மக்களவைத் தேர்தல் தேதி கடந்த மார்ச் 16-இல் வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதும் அனைத்து சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் பறக்கும் படைகள், நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டு தீவிர சோதனைகள் நடைபெற்று வந்தன.

இந்தக் குழுக்கள் மூலம் நடத்தப்பட்ட வாகன சோதனைகளின் போது, உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச் செல்லப்பட்ட கோடிக்கணக்கான ரொக்கப் பணம், போதைப் பொருள்கள், ஆபரணங்கள், பரிசுப் பொருள்கள் ஆகியன பறிமுதல் செய்யப்பட்டன.

தமிழகத்தில் கடந்த 19-ஆம் தேதி வாக்குப் பதிவு நிறைவடைந்த நிலையில், வாகன சோதனைகளில் காட்டப்பட்ட கடுமை குறைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை கூறியது: வாக்குப் பதிவில் பயன்படுத்தப்பட்ட அனைத்து மின்னணு இயந்திரங்களும் வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.



தமிழகத்தில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது முதல் வாக்குப் பதிவு முடிவடையும் வரை பாதுகாப்புப் பணியில் 190 துணை ராணுவப் படையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அவர்களில் 15 படையினரைத் தவிர மற்ற படையினர் வேறு மாநிலங்களுக்குச் சென்றுள்ளனர். 15 படைகளைச் சேர்ந்த வீரர்கள், வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

**கண்காணிப்பு கேமராக்கள்:** தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி, வாக்கு எண்ணும் மையங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகள், மத்திய துணை ராணுவப் படையினரின் நேரடி கட்டுப்பாட்டிலும், வாக்கு எண்ணும் மையத்தின் வளாகமானது மாநில அரசின் ஆயுதப் படை கண்காணிப்பின் கீழும் கொண்டு வரப்பட்டுள்ளன.

வாக்கு எண்ணும் மையம் முழுமையாக கேமராக்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகளை தேர்தல் நடத்தும் அதிகாரிகள் தினமும் நேரில் ஆய்வு செய்து வருகின்றனர்.

13 மாவட்டங்கள்: தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது முதல் வாக்குப் பதிவு முடிவடையும் வரையில் பறக்கும் படைகள், நிலைக் குழுக்கள் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டு வந்தன.

இந்நிலையில், தேர்தல் நடைபெறவுள்ள அண்டை மாநிலங்களை யொட்டியுள்ள தமிழக மாவட்டங்களில் மட்டும் பறக்கும் படைகளும், நிலைக் குழுக்களும் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் திருவள்ளூர், வேலூர், கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, நீலகிரி, கோவை, தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி, திருப்பத்தூர், திருப்பூர் ஆகிய 13 மாவட்டங்களில் 171 குழுக்கள் 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன என்றார் அவர்.

CEO informs about the flying squad surveillance.

தினமணி
23 APR 2024

# வாக்குப் பதிவு இறுதி விவரம் கிடைப்பதில் தாமதம் ஏன்?

## தலைமைத் தேர்தல் அதிகாரி சாகு விளக்கம்



சென்னை, ஏப். 22: வாக்குப் பதிவு இறுதி விவரங்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது ஏன் என்பது தொடர்பாக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு விளக்கம் அளித்துள்ளார்.

வாக்குப் பதிவு விவரங்களை கைப்பேசி செயலில் பதிவிடுவது கட்டாயம் இல்லை என்பதால் தகவல்களைப் பெறுவதில் கால தாமதம் ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவின் உத்தேச விவரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7 மணி, நள்ளிரவு 12 மணிக்கு வெளியிடப்பட்டாலும் இறுதி வாக்குப் பதிவு நிலவரங்கள் வெளியாவதில் தாமதம் ஏற்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் முழுமையான வாக்குப் பதிவு சதவீதத்தை தமிழக தேர்தல் துறை வெளியிட்டது. இந்த தாமதத்துக்கான காரணம் குறித்து செய்தியாளர்களுக்கு தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு திங்கள்கிழமை அளித்த விளக்கம்:

2019-ஆம் ஆண்டுக்கு முன்பு வரை தேர்தல் நடத்தும் அதிகாரிகள் கையொப்பமிட்டு அளிக்கும் விவரங்கள் இறுதி முடிவாக எடுத்துக் கொள்ளப்பட்டன. இப்போதும் அதுதான் நடைமுறையாகத் தொடர்கிறது. அதேசமயம், வாக்குப் பதிவு விவரங்களைப் பெற தேர்தல் ஆணையத்துக்கென பிரத்யேக கைப்பேசி செயலி பயன்பாட்டில் உள்ளது. 2019-ஆம் ஆண்டிலிருந்து இந்த செயலி பயன்பாட்டில் இருந்தாலும், அதில் விவரங்களைப் பதிவிடுமாறு தேர்தல் நடத்தும் அதிகாரிகளை கட்டாயப்படுத்த முடியாது. செயலி மூலமாக வாக்குப் பதிவு விவரங்களை பகிர்ந்து கொள்வது என்பது தேர்தல் ஆணையத்துக்குள் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுதான்.

இந்த மக்களவைத் தேர்தலில் அனைத்து வாக்குச் சாவடி அலுவலர்களும் கைப்பேசி செயலியில் விவரங்களைப் பதிவிடவில்லை.

இதனால் தொலைபேசி மூலமாகவும், கைப்பேசி செயலியில் கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையிலும் இரவு 7 மணி நிலவரப்படி வாக்குப் பதிவு விவரங்கள் வெளியிடப்பட்டன.

இதைத் தொடர்ந்து, உதவித் தேர்தல் நடத்தும் அதிகாரிகள் அனைவரும் அந்தந்த தேர்தல் நடத்தும் அதிகாரிகளிடம் வெள்ளிக்கிழமை இரவு வேளையில் வாக்குப் பதிவு விவரங்களை நேரில் அளிக்கத் தொடங்கினர்.

அதனடிப்படையில், நள்ளிரவு 12 மணியளவில் வாக்குப் பதிவு சதவீதம் 69.46-ஆக மதிப்பிடப்பட்டது. வாக்குச் சாவடி வாரியாக விவரங்கள் முழுமையாகப் பதிவேற்றப்பட்ட நிலையில் இறுதி வாக்கு சதவீதம் 69.72-ஆக கணக்கிடப்பட்டது எனத் தெரிவித்துள்ளார் அவர்.

## வாக்குப் பதிவு சரிவு: கள ஆய்வு நடத்த அறிவுறுத்தல்

சென்னை, ஏப். 22: வாக்குப் பதிவு சரிவுக்கான காரணத்தை கள ஆய்வு மூலம் மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் கண்டறியலாம் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் அவர் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை கூறியதாவது: வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கப்பட்டதாக பலரும் புகார் தெரிவிக்கின்றனர். பட்டியலில் இருந்து ஒரு வாக்காளரின் பெயரை நீக்ககூட, தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்துக்கு அதிகாரமில்லை. ஒவ்வோர் ஆண்டும் வாக்காளர் பட்டியலில் திருத்தப் பணிகள் நடைபெறுகின்றன.

அப்போது, ஒவ்வொரு சட்டப் பேரவைத் தொகுதியிலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தப்படுகிறது.

மேலும், வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளின் போது அரசியல் கட்சிகளால் நியமிக்கப்படும் வாக்குச் சாவடி முகவர்களும் பட்டியல்களை சரிபார்க்கிறார்கள்.

அப்போது, பெயர்கள் விடுபட்டிருந்தால் அவர்கள் கேள்வி எழுப்பலாம். மேலும், இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பிறகும், பட்டியலில் பெயர் சேர்க்கவும், நீக்கவும் வாய்ப்புகள் தரப்படுகின்றன.

வாக்காளர் பட்டியலில் இருந்து உடனடியாக யாருடைய பெயர்களும் நீக்கப்படுவதில்லை. ஒருவருடைய பெயரை நீக்க வேண்டுமெனில், அதற்கென படிவம் 7-ஐ சமர்ப்பிக்க வேண்டும்.

அந்தப் படிவத்தின் அடிப்படையில், பெயரை நீக்கலாமா எனக் கேட்டு விண்ணப்பதாரரின் முகவரிக்கு தபால் அனுப்பப்படும். அவர் சம்பந்தப்பட்ட முகவரியில் வசிக்காவிட்டால் தேர்தல் ஆணையம் அனுப்பும் விளக்கக் கடிதம் உரிய முறையில் சென்றடையாமல் போக வாய்ப்புகள் உள்ளன.

மேலும், நீண்ட நாள்களாக ஒரே இடத்தில் இல்லாதவர்கள், இறந்தவர்கள், இடம் மாறியவர்கள் ஆகியோரின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படுகின்றன.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் தருணத்தில், பெயர்கள் இருக்கின்றனவா, இல்லையா என்பதை வாக்காளர்கள் அறிந்திட வேண்டும். அவ்வாறு நீக்கப்பட்டிருந்தால் பெயர்களைச் சேர்க்க உடனடியாக வாய்ப்புகள் தரப்படுகின்றன.

**கள ஆய்வு நடத்தலாம்:** சென்னை போன்ற பெருநகரங்களில் வாக்குப் பதிவு சதவீதம் வெகுவாகக் குறைந்து வருகிறது. இதனை புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. வாக்குப் பதிவு குறைந்து வருவதற்கான காரணங்கள் குறித்து, ஒவ்வொரு மாவட்டத் தேர்தல் அதிகாரிகளும் கள ஆய்வு நடத்தலாம்.

இந்த ஆய்வின் அடிப்படையில் வாக்குப் பதிவு சதவீதத்தை அதிகரிப்பதற்கான விழிப்புணர்வு ஏற்பாடுகளை தேர்தல் அதிகாரிகள் மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார் அவர்.

CEO Explains about the confusion in the calculation of the polling percentage.

தினகரன்

23 APR 2024

### கடந்த தேர்தலை விட தற்போதைய நாடாளுமன்ற தேர்தலில்

# தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு சதவீதம் குறைந்ததற்கு காரணம் என்ன?

## தமிழக தலைமை தேர்தல் அதிகாரி விளக்கம்

சென்னை, ஏப். 23: தமிழகத்தில் கடந்த நாடாளுமன்ற தேர்தலை விட இந்த தேர்தலில் வாக்குப்பதிவு சதவீதம் குறைந்ததற்கு காரணம் என்ன என்பது குறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி விளக்கம் அளித்தார்.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு நேற்று சென்னை, தலைமை செயலகத்தில் அளித்த பேட்டி:

தமிழகத்தில் 39 நாடாளுமன்ற தொகுதிகளிலும் மிகவும் அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடந்து முடிந்துள்ளது. 68,321 வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற்ற தேர்தலில் எந்த ஒரு மையத்திலும் மறுவாக்குப்பதிவு நடத்த மாவட்ட தேர்தல் அதிகாரியோ அல்லது தேர்தல் பார்வையாளர்களோ கடிதம் எழுதவில்லை. தேர்தல் நடைபெற்ற 19ம் தேதி இரவு தமிழக தேர்தல் அலுவலகம் சார்பில் வெளியிடப்பட்ட வாக்குப்பதிவு சதவீதம் இறுதியானதல்ல. தேர்தல் செயலியில் (ஆப்) கிடைத்த தகவல் அடிப்படையில் சதவீதம் கணக்கிட்டதால் குளறுபடி நடைபெற்றது. உண்மையில் ஒவ்வொரு தொகுதிக்கும் அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரி கையெழுத்திட்டு வெளியிடப்படும் அறிக்கைதான் இறுதியானது. அன்றைய தினம் தூத்துக்குடி தொகுதியில் வாக்குப்பதிவு சதவீதம் உடனடியாக வெளியிடப்படவில்லை. அடுத்த நாள்தான் தேர்தல் அதிகாரி வெளியிட்டார். அதனால்தான் சதவீதத்தில் மாற்றம் ஏற்பட்டது.

தமிழகத்தில் இறுதியாக 69.72% வாக்குகள் பதிவாகியுள்ளது. முன்னாள் தேர்தல் ஆணையர் கோபால்சாமி கூட, ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை வாக்குப்பதிவு சதவீதம் கேட்டு தேர்தல் அதிகாரிகளை தொந்தரவு செய்யக்கூடாது. அதனால் அவர்களுக்கு கூடுதல் அழுத்தம் ஏற்படும் என்று கூறியுள்ளார். தேர்தல் முடிந்த அன்று, நள்ளிரவு 11.59 மணிக்குள் வாக்குப்பதிவு சதவீதத்தை வெளியிட வேண்டும். அதுவும் கட்டாயம் இல்லை. அடுத்தநாள் கூட வெளியிடலாம். தமிழகத்தில் கடந்த தேர்தலை விட வாக்குப்பதிவு சதவீதம் குறைந்ததற்கு தேர்தல் அதிகாரிகள் மட்டும் பொறுப்பல்ல, பொதுமக்களிடம் ஏன் வாக்களிக்கவில்லை என்று கேட்க வேண்டும். அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்று தொடர்ந்து விழிப்புணர்வு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு அக்டோபர் 27ம் தேதி வாக்காளர் வரைவு பட்டியல் வெளியிடப்பட்ட நாள் முதல், இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் வரை அரசியல் கட்சி தலைவர்களுடன் தொடர்ந்து ஆய்வு கூட்டம் நடத்தினர். வாக்காளர் பட்டியலில் இருந்து யார் பெயர் நீக்கப்பட்டுள்ளது, புதிதாக யார் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்று விளக்கம் அளிக்கப்பட்டது. இதுபற்றி மாவட்ட தேர்தல் அலுவலர்கள் தெளிவாக கூறி உள்ளனர். அதேபோன்று, 4 சிறப்பு முகாம்களில் வாக்காளர் பட்டியல் வைக்கப்பட்டுள்ளது. தங்கள் பெயர் இருக்கிறதா? என்று சோதனை செய்ய பொதுமக்களுக்கு வலியுறுத்தப்பட்டது. ஓட்டர் ஹெல்ப்லைன் ஆப் மூலமும் தெரிந்து கொள்ளலாம் என்று கூறப்பட்டது. அதனால், மக்களும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

தமிழகத்தில் வாக்காளர் அடையாள அட்டை வைத்திருப்பவருக்கு மத்திய பிரதேசத்தில் வாக்கு இருப்பதாக சென்னை, தி.நகரில் உள்ள சிலர் கூறியுள்ளனர். இதுகுறித்து ஆய்வு செய்யப்படும். 1996 முதல் வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அந்த கார்டை வைத்து இப்போதும் வாக்களிக்கலாம். ஒருவரின் அடையாள அட்டையில் உள்ள வாக்களர் எண் (எபிக் நம்பர்) வேறு யாருக்கும் வழங்கப்பட மாட்டாது. குளறுபடிகளை சரி செய்ய தான் வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண் இணைக்க கருத்து தெரிவிக்கப்பட்டது. வழக்கு இருப்பதால் இந்திய தேர்தல் ஆணையம் கட்டாயப்படுத்தவில்லை.

தேர்தல் பணிக்காக வந்த வெளிமாநிலத்தை சேர்ந்த பார்வையாளர்கள் சொந்த ஊர் திரும்பி விட்டனர். வாக்கு எண்ணிக்கை நடைபெறும்போது மீண்டும் வருவார்கள். வாக்களிக்க வந்தவர்கள், வெயில், விபத்தில் மரணம் அடைந்தால் ஆணையம் சார்பில் நிவாரணம் வழங்கப்பட மாட்டாது.



### 13 மாவட்டத்தில் மட்டும் பறக்கும் படை சோதனை

தமிழகத்தில் அனைத்து தொகுதிகளுக்கும் தேர்தல் நடந்து முடிந்துவிட்டதால் பறக்கும் படை, நிலை கண்காணிப்பு குழு சோதனை முடிவுக்கு வந்துள்ளது. ஆனால், அண்டை மாநிலங்களில் இன்னும் தேர்தல் முடிவடையாததால் திருவள்ளூர், வேலூர், கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, திருப்பூர், நீலகிரி, கோவை, தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி, திருப்பத்தூர் ஆகிய 13 மாவட்டங்களில் மட்டும் 3 ஷிப்டு முறையில் பறக்கும் படை சோதனை தொடரும். இதில் ஒரு ஷிப்ட்டுக்கு 57 என்ற அடிப்படையில் 3 ஷிப்டுக்கு 171 பறக்கும் படை குழு பணியில் இருப்பார்கள் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு கூறினார். இதன்மூலம் 13 மாவட்டங்களை தவிர மற்ற மாவட்டங்களில் ஆவணங்கள் இல்லாமல் ₹50 ஆயிரத்துக்கு மேல் எடுத்துச் செல்லலாம் என்று தலைமை தேர்தல் அதிகாரி கூறினார்.



### சுத்தம் செய்வது யார்?

தேர்தல் பாதுகாப்பு பணிக்காக 190 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் தமிழகம் வந்திருந்தனர். தேர்தல் முடிந்ததும் 175 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் திரும்பி விட்டனர். வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பு பணிக்காக தொடர்ந்து 15 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் தற்போது ஈடுபட்டு வருகிறார்கள். 68,321 வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவு முடிந்து, சுத்தம் செய்யும் பணிகளில் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் தான் ஈடுபட வேண்டும். சில பள்ளி வளாகத்தில் இன்னும் சுத்தம் செய்யப்படவில்லை என்று சமூகவலைதளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளது. இதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

### 3 காரணங்களால் பெயர் நீக்கம்

குறைவான வாக்குப்பதிவு நடந்த இடங்களில் மாவட்ட தேர்தல் அதிகாரி விசாரணை நடத்துவார். 3 காரணங்களால் வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கப்பட வாய்ப்புள்ளது. ஒன்று, வாக்குச்சாவடி அலுவலர் வீடு வீடாக சோதனை நடத்தும்போது, குறிப்பிட்ட வாக்காளர் அந்த பகுதியில் இருந்து காலி செய்துவிட்டு சென்றிருக்கலாம். இரண்டாவது, ஒருவர் அந்த பகுதியில் இருந்து வேறு விலாசத்துக்கு ஷிப்ட் ஆகி சென்றிருக்கலாம். மூன்றாவது, இறந்திருந்தால் பெயர் நீக்கப்படும். ஒருவர் பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படும் முன், அந்த நபருக்கு ரிஜிஸ்தர் தபால் மூலம் தெரிவிக்கப்படும். இந்த தேர்தலில் கூட ஒரு சிலர் பெங்களூருவில் இருந்தோ அல்லது வெளிநாடுகளில் இருந்தோ வாக்களிக்க வந்து, வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லை என்று கூறியுள்ளனர். இதுபோன்ற நபருக்கு விளக்கம் கேட்டு தேர்தல் ஆணையம் கடிதம் அனுப்பும்போது, அவர்கள் ஏற்கனவே கொடுத்த விலாசத்துக்கு தான் கடிதம் அனுப்பப்பட்டிருக்கும். ஆனால், அவர் தற்போது வெளிநாட்டில் இருந்தால் எப்படி அந்த கடிதத்தை பெற்றிருக்க முடியும். இதுபோன்ற காரணங்களால் தான் பெயர் விடுபட்டிருக்கலாம் என்று தலைமை தேர்தல் அதிகாரி கூறினார்.

### நிதி ஒதுக்க அனுமதி வேண்டும்

தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் ஜூன் 4ம் தேதி வரை தொடரும். ஆனாலும் முதல்வர், அமைச்சர்கள் தலைமை செயலகம் வந்து பணிகளை தொடர எந்த தடையும் இல்லை. அதேநேரம் புதிதாக எந்த அரசு உத்தரவும் அவர்கள் பிறப்பிக்க முடியாது. ஏற்கனவே போடப்பட்ட அரசு உத்தரவுகளை செயல்படுத்த தடை இல்லை. சில திட்டப்பணிகளுக்கு பணம் ஒதுக்குவது என்றால் தலைமை தேர்தல் அதிகாரிக்கு அனுமதி கேட்டு கடிதம் எழுதலாம். அந்த கடிதம் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அவர்கள் அனுமதி அளித்தால் நிதி ஒதுக்கப்படும். இதுபோன்று ஒவ்வொரு திட்டத்தையும் செயல்படுத்த தேர்தல் ஆணையத்திடம் அனுமதி கேட்க வேண்டும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி கூறினார்.

CEO informs that linking Aadhaar number with voter id is the way to avoid confusion in low turnout.

தினகரன்

23 APR 2024

## தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி

# வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு

சென்னை, ஏப்.23: தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி மின்னணு வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி கூறினார்.

இது குறித்து தமிழக தலைமை அதிகாரி சத்யபிரதா சாகு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழகத்தில் கடந்த 19ம் தேதி வாக்குப்பதிவு முடிந்த பிறகு, மின்னணு வாக்கு இயந்திரங்களுக்கு சீல் வைக்கப்பட்டு 39 தொகுதிகளுக்காக பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையங்களில் (43 கட்டிடங்கள்) உள்ள வலுவான அறைகளில் (ஸ்டிராங்க் ரூம்) பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையம் தமிழகத்தில் தேர்தல் பாதுகாப்பு பணிக்காக 190 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் ஒதுக்கி இருந்தது. வாக்குப்பதிவு முடிந்த பிறகு, மின்னணு வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள வலுவான அறைகளை பாதுகாக்க 15 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் மட்டும் தமிழகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதன்படி, தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் படி அனைத்து வாக்கு எண்ணும் மையங்களுக்கும் போதிய பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது.



▶ வடசென்னை நாடாளுமன்ற தொகுதியில் பதிவான வாக்கு இயந்திரங்கள், காமராஜர் சாலையில் உள்ள ராணி மேரி கல்லூரியில் ஸ்டிராங் ரூமில் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. இதனை போலீசார் 24 மணி நேரமும் பாதுகாப்பு பணியில் இருந்து கண்காணித்து வருகின்றனர்.

மின்னணு வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள வலுவான அறைகள் இரட்டை பூட்டு அமைப்புகளுடன் பாதுகாக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணும் மையங்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. உள் சுற்றளவு பகுதி துணை ராணுவ வீரர்களின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ளது. இரண்டாவது பகுதியில் மாநில ஆயுதம் தாங்கிய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மூன்றாவது அடுக்கு பாதுகாப்பு பணியில் மாநில காவல் துறையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். வாக்கு எண்ணும் மையம் முழுவதும் சிசிடிவி கண்காணிப்பின் கீழ் உள்ளது. மேலும், வலுவான அறையின் பாதுகாப்பை சரிபார்க்க மாவட்ட தேர்தல் அதிகாரிகள் தினமும் வலுவான அறைகளுக்கு செல்கின்றனர்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் படி, அண்டை மாநிலங்களுடனான எல்லையை பகிர்ந்து கொள்ளும் எல்லை மாவட்டங்களிலும் வாக்கு எண்ணும் நாள் வரை முக்கியமான இடங்களில் பறக்கும் படை குழுக்கள், நிலையான கண்காணிப்பு குழுக்கள் நிறுத்தப்படும்.

As per the ECI instructions 3 tier protection for counting centres

தினகரன்
23 APR 2024

### ரயிலில் 4 கோடி ரூபாய் பணம் சிக்கிய வழக்கில்

# 10 நாட்கள் அவகாசம் கேட்டு நயினார் நாகேந்திரன் கடிதம்

சென்னை, ஏப்.23: தாம்பரத்தில் நெல்லை எக்ஸ்பிரஸ் ரயிலில் 4 கோடி ரூபாய் சிக்கிய வழக்கில், நேரில் ஆஜராக 10 நாள் அவகாசம் கேட்டு நெல்லை பாஜக வேட்பாளர் நயினார் நாகேந்திரன் வழக்கறிஞர் மூலம் கடிதம் அனுப்பியுள்ளார்.

சென்னையில் இருந்து நெல்லைக்கு கடந்த 6ம்தேதி இரவு சென்ற நெல்லை எக்ஸ்பிரஸ் ரயிலில் நெல்லை பாஜ வேட்பாளர் நயினார் நாகேந்திரன், வாக்காளர்களுக்கு கொடுக்க பணம் எடுத்து செல்வதாக தேர்தல் பறக்கும் படையினருக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில், தாம்பரம் ரயில் நிலையத்திற்கு வந்த ரயிலை, தேர்தல் பறக்கும் படையினர், தாம்பரம் ரயில்வே போலீசார், தாம்பரம் போலீசாரின் உதவியுடன் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, எஸ்7 கோச் பெட்டியில் இருந்து 3 பேரிடம் 6 பைகளில் இருந்த ₹4 கோடியை போலீசார் பறிமுதல் செய்து நடத்திய விசாரணையில் கொளத்தூர், திருவிக நகர் பகுதியை சேர்ந்த சதீஷ் (33), அவரது தம்பி நவீன் (31), ஸ்ரீவைகுண்டம் பெருமாள் (25) என்பதும், சதீஷ் மற்றும் அவரது தம்பி நவீன் இருவரும் நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமான புரசைவாக்கம் பகுதியில் உள்ள ப்ளூ டைமண்ட் ஓட்டலில் வேலை செய்ததும், பெருமாள் நயினார் நாகேந்திரனின் உறவினர் என்பதும், சதீஷிடம் பாஜ உறுப்பினர் அட்டை இருந்ததும், 3 பேரும் பணத்தை திருநெல்வேலிக்கு கொண்டு சென்றதும் தெரியவந்தது. இந்த பணத்தை தாம்பரம் வட்டாட்சியர் நடராஜனிடம் ஒப்படைத்து, அரசு கருவூலத்தில் வைக்கப்பட்டது.

இதனையடுத்து, தாம்பரம் போலீசார் வழக்குப்பதிந்து 3 பேரையும் கைது செய்தனர். தொடர்ந்து 20 நாட்களுக்கு தினமும் காலை 10 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி, 3 பேரும் கையெழுத்திட நிபந்தனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், அவர்கள் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் போலீசார் விசாரணை நடத்தினர். இதில் நாகேந்திரனுக்கு சொந்தமான ஓட்டலில் சதீஷ் 6 வருடங்களாக மேலாளராக வேலை செய்ததும், ஜெய்சங்கர், ஆசைத்தம்பி, முருகன், கோவர்தனன் ஆகியோர் கொடுக்கும் பணத்தை தங்களிடம் கொண்டு வந்து கொடுக்கும்படி நாகேந்திரன் கூறியதாக தெரிவித்தனர். அதன் அடிப்படையில் நயினார் நாகேந்திரனுக்கு, தாம்பரம் காவல் நிலையத்தில் பணியாற்றும் காவலர் ஒருவர் மூலம் சம்மன் அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் ஆசைதம்பி, முருகன், சென்னை அபிராமிபுரத்தை சேர்ந்த பாஜ மாநில தொழில்துறை பிரிவின் தலைவர் கோவர்தனன், தாம்பரம் பாஜ நிர்வாகியும், கட்டுமான நிறுவன உரிமையாளருமான ஜெய்சங்கர் ஆகியோரும், பணத்தை நெல்லை எக்ஸ்பிரஸ் ரயிலில் கொண்டு வந்த சதீஷ், நவீன், பெருமாள் ஆகிய 8 பேரும் ஒரு வாரத்திற்குள் தாம்பரம் காவல் நிலையத்தில் விசாரணைக்கு நேரில் ஆஜராக சம்மன் அனுப்பப்பட்டிருந்தது.

நெல்லை பாஜ வேட்பாளர் நயினார் நாகேந்திரன் 22ம்தேதி நேரில் விசாரணைக்கு தாம்பரம் காவல் நிலையத்தில் ஆஜர் ஆவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் தனது வழக்கறிஞர் மூலம் தவிர்க்க முடியாத சில காரணங்களால் தன்னால் ஆஜராக முடியவில்லை எனவும், தான் ஆஜராக 10 நாள் அவகாசம் வேண்டும் எனக்கேட்டு வழக்கறிஞர் ஜெயகர் டேவிட் மூலம் கடிதம் அனுப்பியுள்ளார்.



மேலும் ஜெயகர் டேவிட், வக்கீல் பால் கனகராஜின் ஜூனியர் எனவும் இந்த வழக்கை பால்கனகராஜ் தான் நயினார் நாகேந்திரனுக்காக வாதாட உள்ளதாகவும் கூறப்படுகிறது.

Thiru. Nainar Nagendran asking 10 days time for 4 crore seized case

தினகரன்

23 APR 2024

## நயினார் நாகேந்திரன் உதவியாளர்களிடம்

# ₹4 கோடி பறிமுதல் சட்ட விரோத பணப்பரிமாற்ற சட்டத்தில் வராது

**உயர் நீதிமன்றத்தில் அமலாக்க துறை தகவல்**

சென்னை, ஏப். 23: திருநெல்வேலி தொகுதி பாஜ வேட்பாளர் நயினார் நாகேந்திரன் உதவியாளர்களிடம் 4 கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கு, சட்ட விரோத பணப் பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் வராது என்று அமலாக்கத்துறை சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

திருநெல்வேலி தொகுதி சுயேச்சை வேட்பாளர் ராகவன், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், பா.ஜ. வேட்பாளர் நயினார் நாகேந்திரன் சார்பில் வாக்காளர்களுக்கு விநியோகிக்க கொண்டு செல்லப்பட்ட 4 கோடி ரூபாய் பணம் தாம்பரம் ரயில் நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்டது.

இதேபோல, காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ் சார்பாக வாக்காளர்களுக்கு வழங்குவதற்காக வைத்திருந்த 28 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக இருவர் மீதும் சட்ட விரோத பணப் பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு அமலாக்க துறையிடம் மனு அளித்துள்ளேன். எனவே, இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க அமலாக்கத்துறைக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரியுள்ளார்.

இந்த மனு நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், சுந்தர் மோகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பின்னரும் இருவர் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார். அதற்கு, இந்த வழக்கு சட்ட விரோத பணப் பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் வருமா என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த அமலாக்கத் துறை சிறப்பு வழக்கறிஞர் என்.ரமேஷ், சட்ட விரோத பணப் பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் வராது என்று தெரிவித்தார். இருப்பினும் மனு குறித்து விரிவாக பதிலளிக்க அவகாசம் வேண்டுமென்று அவர் கோரினார்.

இதையடுத்து, வழக்கின் விசாரணையை நாளை மறுநாளைக்கு தள்ளிவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

Enforcement Dept informs Highcourt that 4 crore seizure will not cover in Unlawful Money Transfer Act.